# ஆரோக்கியம்

சுவிற்சர்லாந்தில் வாழும் ஒவ்வொருவருக்கும் மருத்துவம் மற்றும் விபத்துக்காப்புறுதி கட்டாயமானது. மருத்துவக்காலப்புறுதி அல்லது மருத்துவநிதியம் எவ்வித வயது, நாடு, அடையாள அட்டை என எவ்வித வேறுபாடும் இல்லாமல் அனைவருக்கும் கட்டாயமானதாகும். ஒவ்வொருவரும் குடிவந்து மூன்று மாதத்துக்குள் மருத்துவக்காப்புறுதிக்கு பதிவு செய்திருத்தல் அவசியம்.

குடியேற்றவாசிகளின் ஆரோக்கியம் தொடர்பிலான சிறப்புத்தேவைகள். மற்றும் சுவிற்சர்லாந்துக்கு புதிதாக வருவோருக்கு ஆரோக்கியம் தொடர்பில் ஏற்படும் பல தரப்பட்ட கேள்விகள்.

சுவிற்சர்லாந்தில் மருத்துவ சிகிச்சைக்கான கட்டணம் எவ்வளவு?

ஒரு நோயாளிக்குரிய உரிமைகளும் பராமரிப்புகளும் என்ன?

ஆரோக்கிய வழிகாட்டடி தகவல்கள் ஏனைய மொழியில் உள்ளதா?

இதுபோன்ற பலதரப்பட்ட வினாக்களுக்கான விடைகனை சுவிஸ் செஞ்சிலுவை சங்கத்தின் Gesundhwitswegweiser எனப்படும் ஆரோக்கிய வழிகாட்டி வழங்குகின்றது. ஆரோக்கிய வழிகாட்டி 18 மொழிகளில www.migesplus.ch எனும் தளத்தில் கடைக்கும். Gesundheitsspot எனப்படும் ஆரோக்கிய வழிகாட்டி நிகழ்வு சுயனழை ஓ வானொலியில் ஒலிபரப்பாகியிருந்தது. அவற்றை மீளக்கேட்பதற்கு www.radiox.ch எனும் தளத்தில் Kampagnen எனும் பகுதிக்கு செல்லவும்.